# கிண்ணியா நகர சபை

# திருகோணமலை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பிப்பு

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மே 08 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 19 ஆந் திகதி கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இறுதி அறிக்கை 2013 திசெம்பர் 13 ஆந் திகதி கிண்ணியா நகரசபை தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரீசீலனைகளிருந்து தென்படுவதும் எனக்குச் சமர்ப்பிக்கப்பட்ட அதி உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய கிண்ணியா நகர சபையின் 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டின் பொருட்டு முறையான கணக்கீட்டு அறிக்கைகள் பேணப்பட்டுள்ளன என்றும் தலைவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிசார் கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களைத்தவிர, 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான கிண்ணியா நகர சபையின் செயற்பாடுகள் தொடர்பான நிலைமை மற்றும் அத் தினத்தில் முடிவுற்ற அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளது நிதிசார் விளைவுகளும் காசுப்பாய்ச்சலும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தென்படும் விதத்தில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கிசைய நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளனவென்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

சபையானது 2012 ஆம் ஆண்டில் வருமானம் உழைப்பதற்கும் சேவையை வழங்குவதற்கும் ரூபா 58,338,860 கூட்டுத் தொகையான நிலையான சொத்துக்களை பயன்படுத்தி இருந்த போதும் அச்சொத்துக்களின் மீது பெறுமான தேய்விற்காக ஏற்பாடு செய்யப்படாமையால் சபை உழைத்த வருடத்துக்கான வருமானத்திற்குரிய செலவுகள் நிதிக்கூற்றில் பிரதிபலிக்கவில்லை என்பது அவதானிக்கப்படுகின்றது.

1.3.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன

(அ) ரூபா 5,578,066 தொகையான மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புகள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கி மீதி ரூபா 27,816 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ஊழியர் கடன் ரூபா 23,770 வினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கணிப்பீட்டுத் தவறு காரணமாக அரசிறைகளின் நிலுவை ரூபா 650,611 வினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்கான ரூபா 135,608 தொகையான கணக்காய்வுக் கட்டணத்திற்காக நிதி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 **பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) ரூபா 3,593,661 தொகையான நானாவித கடன் கொடுத்தோர் மீதிகள் இரண்டு வருடங்களுக்கு மேலாக தீர்த்து வைக்கப்படாதிருந்தன.

(ஆ) ரூபா 7,378,573 தொகையான அரசிறை நிலுவைகளை அறவிடுவதற்கு மூன்று வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

1.3.4 **கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

பின்வரும் ஒவ்வொரு கணக்கு விடயத்திற்கும் எதிரே சுட்டிக்காட்டப்பட்டுள்ள சான்றுகள் இன்மையால் அவ்விடயங்களை கணக்காய்வில் திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியாதுள்ளது.

| விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணி கட்டிடம் | 31,403,838 | நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை, காணி உறுதி என்பன |
| வாகனம் | 14,200,006 | நிலையான சொத்துப் பதிவேடு, மெய்மையாய்வுச் சபை அறிக்கை |
| பொறித்தொகுதி | 4,638,775 | |
| மீளளிக்கக்கூடிய வைப்பு | 2,359,487 | விபரப் பட்டியல், காலப் பகுப்பாய்வு |
| நானாவித வைப்பு | 4,000,904 | |
| கடன் கொடுத்தோர் | 3,593,661 | மீதிகளின் உறுதிப்படுத்தல் கடிதம், காலப் பகுப்பாய்வு |

1.3.5 **<u>சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை</u>**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| **<u>நகரசபை நிதி ஒழுங்கு விதி</u>** | |
| (அ) இல 124 | ரூபா 116,597 தொகையான மூன்று செலவினங்களுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் தலைப்பு, உப தலைப்பு, செலவினக் குறியீடு என்பன குறிப்பிடப்படவில்லை. |
| (ஆ) இல 131 | ரூபா 276,007 தொகையான ஆறு செலவினங்களுக்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களில் திகதி, இலக்கம், அளவு, போன்ற விபரங்களும் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (இ) இல 174 | 2012 ஆம் ஆண்டிற்கான அரசிறை வைப்பு பதிவேட்டில் ஆரம்ப மீதி, பெறுவனவு, கொடுப்பனவு என்பன பூரணப்படுத்தப்படவில்லை. |
| (ஈ) இல 200 | பிரதான பேரேடு தகவல்கள் பேணப்படாது பேரேட்டு மீதிகள் கணக்கிற்கு கொண்டுவரப்பட்டிருந்தன. |

2. **<u>நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு</u>**

2.1 **<u>நிதிசார் விளைவுகள்</u>**

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நகர சபையின் வருமானத்திற்கு மிகையான மீண்டுவரும் செலவினம் ரூபா 2,512,834 ஆகும். விளைந்திருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திற்கு மிகையான வருமானம் ரூபா 3,255,561 ஆகும்.

2.2 **மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளவாறான வருமானம், வருமான நிலுவை என்பன**

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், வருமான நிலுவை என்பவற்றுக்கான தகவல்கள் கீழே தரப்படுகின்றன

| | வருவாய்க்கான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | டிசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரி | 1,061 | 303 | 758 |
| (ii) | குத்தகை வாடகை | 11,396 | 7,917 | 3,479 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,977 | 3,452 | 525 |
| (iv) | ஏனைய வருமானம் | 3,435 | 1,053 | 2,382 |

2.3 **பயன்படுத்தப்படாமல் உள்ள சொத்துக்கள்**

பின்வரும் சொத்துக்கள் நீண்டகாலமாக பயன்படுத்தப்படாமல் இருந்தன.

| சொத்துக்களின் வகை | கொள்வனவு செய்த திகதி | பெறுமதி ரூபா | பயன்படுத்தப்படாத காலம் |
|---|---|---|---|
| உழவு இயந்திரம் | குறிப்பிடவில்லை | 716,000 | 3வருடங்களுக்கு மேல் |
| இரண்டு சக்கர உழவு இயந்திரம் | 1992 ஒக்டோபர் | 34,137 | 5வருடங்களுக்கு மேல் |
| டிப்பர் (Tipper) இயந்திரம் | 2008 யூன் | 5,098,000 | 1 வருடம் |
| சீமெந்து அரைக்கும் இயந்திரம் | குறிப்பிடப்படவில்லை | 300,000 | 2 வருடம் |

3. **முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கீழ்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) பாதீட்டு
(ஆ) கணக்கீடு
(இ) நிலையான சொத்துக்கள்
(ஈ) வரி சேகரிப்பு